

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் நாதல்படுகை கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ள உபரிநீர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்துள்ளதை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சியர் தஏ.பி.மகாபாரதி மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கே.மீனா. ஒன்றிய கழக செயலாளர்கள் செல்ல சேது ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன். கொள்ளிடம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் பலர் உள்ளனர்.



கரூர் மாவட்ட தி.மு.க. சார்பாக, கலைஞர் அறிவாலயம் முன்பு சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு தினத்தை முன்னிட்டு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. அவைத்தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ. இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி முன்னிலையில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு தினம்!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில் அமைதி பேரணி!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 5 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டின் அரசியல் வரவாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை

சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கவைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2024 புதன்கிழமை காலை 9 மணியளவில் எனது (எஸ்.ரகுபதி) தலைமையிலும், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் அறந்தாங்கி அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று அண்ணா சிலை அருகில் அமைக்கப்பட்டிருக்கின்ற கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இந்நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள்,

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ம் ஆண்டு நினைவு நாள்! நாகை மாவட்ட

# ஒன்றிய, நகர, பேரூர் தோறும் கலைஞர் திருஉருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை, ஆக. 5 -

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



தமிழ் மொழியை செம்மொழியாக்கி தமிழுக்கும் , தமிழ் நாட்டிற்கும் பாதுகாப்பு அரணாக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் போட்டியிட்ட 13 முறையும் வெற்றியை கண்டு 5 முறை 20 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்த போது அனைவருக்கும் பாதுகாப்பான குடி நீர் வழங்க தமிழகம் முழுவதும் மேல் நிலை நீர் தேக்க தொட்டியை அமைத்தும், கை ரிக்ஷாவை ஒழித்தும், மகளிர் சுய உதவி குழுவை உருவாக்கி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ்பாஸ், முதல் பட்டதாரியின் படிப்பு செலவை அரசே ஏற்கும் திட்டம், கற்பினி பெண்களுக்கு உதவித் தொகை என எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த தமிழ்நாட்டிடன் வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுக்கு மேலாக தி,மு,க. தலைவர், 80 ஆண்டு பொதுவாக்கை, 70 ஆண்டு திரைத்துறை என கலை, இலக்கியம், எழுத்து என தான் தொட்ட துணை அனைத்திலும் கலைஞருக்கு நிகர் கலைஞர் என்று வாழ்ந்து பல பிரதமர்கள், ஜனாதிபதிகளை உருவாக்கிய மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளான வரும் 7.8.2024 அன்று காலை 7.00 மணிக்கு கலைஞர் பிறந்த திருக்குவளையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது, மேலும் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும், மேலும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் கலைஞர் திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வேண்டும். இதற்காக ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும். இந் நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய,, நகர, பேருர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில்

# மாமன்னன் இராஜேந்திரசோழன் பிறந்த நாள்!

## ஆடி திருவாதிரை விழாவினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக. 5 -

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் திருக்கோவிலில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாள் ஆடி திருவாதிரை விழாவினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது

ஒவ்வொரு ஆண்டும் ஆடி திருவாதிரை விழா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி சிறப்பாக நடைபெற்று வருகிறது. நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புதான் இந்த விழா. நம்முடைய மண்ணிற்கு பெருமை சேர்த்த மகத்தான மாமன்னன் இராஜேந்திர சோழனை கொண்டாட வேண்டியது நமது கடமை.

நாம் இப்படி கொண்டாடாவிட்டால் எதற்கும் தொடர்பில்லாதவர்களை கொண்டாட வேண்டி நமது தலையில் கட்டிவிடுவார்கள், இராஜேந்திரசோழன் வாழ்ந்ததற்கு சான்றாக அவர் கட்டிய கோவில்கள், செப்பேடுகள், சிற்பங்கள் இருக்கிறது. நாம் அதை வைத்து ஆதாரபூர்வமாக கொண்டாடுகிறோம். நம்மை மயக்கி, நம்முடைய வரலாற்றை மறைத்து, வேறொரு வரலாற்றை உயர்த்தி காட்டுவதற்காக செய்கிறார்கள். இதனை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உணர்ந்ததன் காரணமாகத்தான் நமக்கான அடையாளம் எது? நமக்கான பண்பாடு எது? என்பதனை அறிவதற்கு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்தார்கள்.

நமக்கு வழிகாட்டுவது நமது மொழியில் வந்த திருக்குறள்தான். எனவே திருக்குறளை நாம் கற்க வேண்டும். உயர்த்தி பிடிக்க வேண்டும் என்றுதான் திருவள்ளுவருக்கு 133 அடியில் சிலை அமைத்தார். சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். அதேபோல தமிழ்நாட்டு வாழ்வியலை எடுத்துக்காட்டும் சிலப்பதிகாரத்தை தூக்கி பிடிப்பதற்கு தான் பூம்புகாரிலே கோட்டம் அமைத்தார். இப்படி நம் மண்ணோடு நமக்கு சொந்தமானவற்றை உயர்த்தி பிடிக்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இராஜேந்திரசோழன் வரலாற்றை நாம் நினைவு கூற வேண்டும், அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்றுதான் அரசு விழாவாக கொண்டாடுவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த பிரதேசத்தில் இப்படி ஒரு கோயிலை நிறுவ வேண்டும், களம் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு இருக்கிறார் என்றால், எந்த தொழில் நுட்பமும் இல்லாத காலத்தில் எவ்வளவு நுணுக்கமாக, சிந்தனையோடு அவர் செயல்பட்டு இருந்தால் இவ்வாறு அமைத்திருக்கும் என்று நாம் உணர வேண்டும்.

ஆன்மீக தளமாக இருந்ததை, வரலாற்று தளமாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாற்றியமைத்திருக்கிறார்.

எதிர்காலத்தில் முக்கிய சுற்றுலா தளமாக இதன் மூலம் இந்த பகுதி முன்னேறுவதற்கு வாய்ப்பையும் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்து வருகிறார்கள். இப்பகுதி வளர்வதற்கு இந்த விழா மூலம் உறுதுணையாக இருப்போம். இந்த விழாவினை நடத்தும் வாய்ப்பை வழங்கிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இப்பகுதி மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசினார்.

மேலும், ஆடித் திருவாதிரை விழாவில் பரத நாட்டியம், தப்பாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், கிராமிய நடனம், கட்டைக்கால் ஆட்டம், சிலம்பாட்டம், பள்ளி மாணவ, மாணவியர் பங்குபெறும் கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் காலை முதல் இரவு வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சித் துறைத் திட்ட இயக்குநர் கங்காதாரிணி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட சுற்றுலா அலுவலர் தஞ்சாவூர் / அரியலூர் சங்கர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) சாமி முத்தழகன், இந்து சமய அறநிலையத் துறைய உதவி ஆணையர் நாகராஜ், உதவி சுற்றுலா அலுவலர் சரவணன், வட்டாட்சியர் ஜெயங்கொண்டம் சம்பத்குமார், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட அறங்காவலர் கு.இராஜே ந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.ராமராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, வி.எம்.ஷாஜகான், மாவட்ட அறங்காவலர் குழ உறுப்பினர் பானுமதி, கழக வழக்கறிஞர் சசிகுமார், மாவட்ட மீணவரணி அமைப்பாளர் எம்.ஜி.ராஜேந்திரன், நகர கழக நிர்வாகிகள் முரசொலி குமார், பா.இரமேஷ்,நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், கங்கை கொண்ட சோழபுரம் ஊராட்சி மன்றத்தலைவர் சரஸ்வதி, உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட சிவன் கீழ வீதியில் நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டகபுதிய நியாயவிலைக்கடை கட்டிட திறப்பு விழாவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் வழங்கினார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர்.ப.ஆகாஷ், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் .வை.செல்வராஜ், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி, கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் அ. டயானாஷர்மிளாமற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்

### ஆகஸ்ட் 5 (1985)



இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.

1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை ‘கிண்டி கோபால்’ என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.

சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி

### ஆகஸ்ட் 5 (1971)



திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். ‘நடிப்பிசைப்புலவர்’ என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.

தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

“பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.